# மூன்றாம் இடைப்பருவத் தேர்வு 2023

## ஆறாம் வகுப்பு

## தமிழ்

நேரம்: 1.30 மணி மதிப்பெண்:50

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5x1=5

1. தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல் ______
   அ) திருவாசகம் ஆ) திருக்குறள் இ) திரிகடுகம் ஈ) திரு[illegible]
2. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர் ______
   அ) கோவை ஆ) மதுரை இ) தஞ்சாவூர் ஈ) சிதம்பரம்
3. சோம்பல் என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல் ______
   அ) அழிவு ஆ) துன்பம் இ) சுறுசுறுப்பு ஈ) சோகம்
4. வாழ்வில் உயர கடினமாக ______ வேண்டும்.
   அ) பேச ஆ) சிரிக்க இ) நடக்க ஈ) உழைக்க
5. இடுகுறிப்பெயரை எடுத்து எழுதுக.
   அ) பறவை ஆ) மண் இ) முக்காலி ஈ) மரங்கொத்தி

**பொருள் தருக.** 2x1=2

6. அ) தண்டருள் ஆ) சுயம்

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.** 2x1=2

7. அ) ஆலோசனை ஆ) செடிகொடிகள்

**பொருத்துக** 4x1=4

8. தமிழ்நாட்டுக் கவிஞர் – தாயுமானவர்
9. தமிழ்க் கையேடு – தாராபாரதி
10. கவிஞாயிறு – பாரதியார்
11. பராபரக்கண்ணி – ஜி.யு. போப்

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5x2=10

12. தாராபாரதியின் பாடலில் இடம் பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
13. காந்தியடிகள் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் முதலில் ஏன் நுழையவில்லை ?
14. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும் ?
15. பழம், வேர் ஆகியவற்றின் இயல்பு யாது ?
16. அமுதசுரபியின் சிறப்பு யாது ?
17. பிற உயிர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும் ?
18. ஈகை பற்றிய வள்ளுவரின் கருத்து யாது ?

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 2x2=4

19. சொல் என்றால் என்ன ?
20. பின்வரும் தொடரில் உள்ள நால்வகைச் சொற்களை எழுதுக.
    வளவனும் தங்கையும் மாநகரப் பேருந்தில் ஏறினர்.
21. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
22. காரணப்பெயர் என்றால் என்ன ?

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 2x3=6

23. காந்தியடிகளின் உடை மாற்றத்திற்குக் காரணமாக அமைந்த நிகழ்வினை எழுதுக.
24. பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை ?
25. மணிபல்லவத்தீவு எவ்வாறு காட்சியளித்தது ?
26. காந்தியடிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு யாது ?

அடிமாறாமல் எழுதுக 3+2=5

27. புல்வெளியெல்லாம் .......... எனத் தொடங்கும் பாடலை எழுதுக.
28. பகுத்துண்டு எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

கலைச்சொல் தருக. 2x1=2

29. அ) Trust ஆ) Art Gallery

அகரவரிசைப்படுத்துக. 2

30. பெண்கள், பாரதம், புதுமை, பீலி, பேருந்து, பூமி, பழங்கள், பொதுக்கூட்டம், பையன், போக்குவரத்து, பின்னிரவு

இரு பொருள் தருக. 1x1=1

31. ஆறு

கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக. 2x1=2

32. அ) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.
    ஆ) அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை.

எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக. 1x5=5

33. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வைச் சுருக்கமாக எழுதுக.
34. கட்டுரை எழுதுக. 'தேசிய ஒருமைப்பாடு'
35. 'பாதம்' கதையைச் சுருக்கி எழுதுக.